**<u>சார்பு நீதிமன்றம், கோவில்பட்டி.</u>**

**<u>OS NO. 231/2024 (வாசா.1 – மதன்மோகன்) தேதி: 06.02.2026</u>**

**<u>வாசா1 மீண்டும் ஆஜர். சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டு 9,10,19,25,26,30,35,45,50,52,54,60 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

2022ம் வருடம் நடைபெற்ற கோவில்பட்டி நாடார் உறவின்முறை சங்க தேர்தல் செல்லாது என பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சரிதான். அந்த தேர்தல் மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவின் அடிப்படையில் நடந்தது என்றால் அவ்வாறு நடக்கவில்லை. அந்த தேர்தல் மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவின்படி நடைபெறவில்லை என்பது தான் எங்கள் வழக்கு என்றால் சரிதான். மதுரை உயர்நீதிமன்ற கிளை உத்தரவின்படி தேர்தல் ஆணையர் நியமணம் செய்யப்பட்டு அந்த தேர்தல் ஆணையரின் தலைமையில்தான் தேர்தல் நடந்தது என்றால் சரிதான். ஆனால் பள்ளி நிர்வாகிகள் முன்பாக நடைபெறவில்லை. சங்க துணை விதிகளின் படி தேர்தல் நடைபெறவில்லை. அதனால்தான் தேர்தல் செல்லாது என கூறுகிறேன். சங்க துணை விதிகளின் படி தேர்தல் நடைபெறவில்லை என்பதை தேர்தல் நடத்திய தேர்தல் ஆணையரிடம் நான் எதுவும் கொடுக்கவில்லை என்றால் 21.12.2022 தேதியில் தேர்தல் ஆணையரிடம் ஆட்சேபணை கொடுத்துள்ளேன். 21.12.2022 தேதியில் தேர்தல் ஆணையரிடம் கொடுத்த ஆட்சேபணை ஆவணத்தை இந்த

வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உறவின் முறை சங்கத்திற்கு 2022ம் வருடத்திற்கு முன்பு 2 வருடங்கள் எந்த தேர்தலும் நடைபெறவில்லை என குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். 2019ம் வருடத்திற்கு பின்னர் உறவின்முறை சங்க பொதுக்குழு கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளேனா என்றால் 2019ம் வருடத்திற்கு பின்னர் பொதுக்குழுவே நடைபெறவில்லை. பொதுக்குழு சம்பந்தமாக எனக்கு எந்த கடிதமும் வரவில்லை. 2022ம் வருட சங்க தேர்தலுக்கு பின்னர் நான் எந்த பொதுக்குழுவிலும் கலந்து கொள்ளவில்லை. 1 முதல் 65 பிரதிவாதிகள் தான் சங்கத்தின் நிர்வாக குழு உறுப்பினர்கள் என்ற விவரம் எனக்கு எப்படி தெரியும் என்றால் அவர்கள் நிர்வாக குழுவிலே இல்லை. 1 முதல் 65 பிரதிவாதிகள் முறைகேடாக தேர்ந்தெடுக்கப்பட்டதால் அவர்கள் மீது வழக்கு போட்டுள்ளேன். தேர்தல் முறைகேடாக நடந்தது என்ற விவரம் எந்த அடிப்படையில் கூறுகிறேன் என்றால் முறைகேடாக வேட்பு மனு நிராகரிக்கப்பட்டதின் அடிப்படையிலும் நான் ஏற்கனவே மதுரை தேர்தலில் நான் கலந்து கொண்டததின் அடிப்படையிலும் கூறுகிறேன். மேலும் ரத்தினராஜ், ஸ்ரீதரன் வழக்கறிஞர்கள் ஆகியோர்களின் வேட்பு மனுவை முன்மொழிய நான் மதுரை சென்ற போது சந்தா ரசீதுகள் அந்த சமயத்தில் உடனடியாக வாங்கப்பட்டு ரசீது வழங்கப்பட்டு வேட்பு மனுவும் ஏற்கப்பட்டது. ஆனால் கோவில்பட்டியில் நடைபெற்ற தேர்தலில் அந்த

நடைமுறை பின்பற்றப்படவில்லை. மேற்படி மதுரை தேர்தல் விவரத்தை எனது பிராதிலோ நிருபண வாக்குமூலத்திலோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான். நாங்கள் தாக்கல்செய்துள்ள வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், எங்கள் வழக்கில் நியாமற்ற வழக்கு மூலம் உள்ளது என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:** இதர பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,
சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.